# சுவிசேஷமும் ஞானஸ்நானமும்

நாம் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்தாலன்றி, நமது ஞானஸ்நானம் மதிப்பற்றதாக உள்ளது. இதனால்தான் பவுல், ‘‘ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார் ...’’ (1 கொரி. 1:17) என்று எழுதினார். ஞானஸ்நானம் முக்கியமற்றது என்று பவுல் கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக, அவர் சுவிசேஷத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இவ்வசனத்தில் உள்ள “இல்லை ... ஆனால்” என்ற கிரேக்க மரபுச் சொல் வழக்கானது பவுல் ஞானஸ்நானம் கொடுப்பவரல்ல என்று அர்த்தப் படுத்தவில்லை, ஏனெனில் அவர் ஞானஸ்நானம் கொடுத்தார் (1 கொரி. 1:14-16); மாறாக இது, சுவிசேஷமே அவரது வலியுறுத்தமாய் இருந்தது என்றுதான் அர்த்தப்படுத்திற்று.[1]

ஞானஸ்நானம் என்பது சுவிசேஷத்தின் ஒரு பாகமாய் இருப்பினும், முழுமையான சுவிசேஷமின்றி அது இரட்சிக்க முடியாது என்று பவுல் போதித்தார்; ஏனெனில் இரட்சிக்கும் வல்லமையானது ஞானஸ்நானத்தில் அல்ல, சுவிசேஷத்திலேயே உள்ளது (ரோமர் 1:16; எபே. 1:13). விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை நம்மை இரட்சிப்பவையல்ல. இயேசுவின் இரத்தம் மட்டுமே இரட்சிக் கின்றது; இருப்பினும், நமது விசுவாசம் நம்மை மனந்திரும்பி, அறிக்கை யிட்டு, ஞானஸ்நானம் பெறும்படி வழி நடத்தாத வரையிலும் அவருடைய இரத்தம் நம்மை இரட்சிக்காது. நாம் தேவனுடைய வசனம் பிரசங்கிக்கப் படுவதைக் கேட்பதினால் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதற்கு வழிநடத்தப் பட வேண்டும்.

இரட்சிப்பு என்றால் ‘‘என்ன?’’ மற்றும் அது ‘‘எப்பொழுது?’’ என்பவைகளுக்கிடையில் வித்தியாசம் உள்ளது. இயேசுவின் மரணத்தில் அவர் சிந்திய இரத்தமே நம்மை இரட்சிக்கின்றது. “என் பாவத்தைக் கழுவுவது எது?” என்று கேள்வி கேட்டுப் பிறகு “இயேசுவின் இரத்தம் தானே’’ என்று பதில் அளிக்கும் பழம்பாடல் அவ்வாறு கூறுவதில் சரியானதாகவே உள்ளது. நாம் இரட்சிப்பை உண்டாக்க ஒன்றும் செய்ய முடியாது (எபே. 2:8, 9); அதை இயேசுவின் இரத்தம் மட்டுமே செய்ய முடியும் (மத். 26:28; 1 பேது. 1:18, 19).

*இயேசுவின் இரத்தம் நமது பாவங்களை எப்பொழுது கழுவுகின்றது? நாம் அவருக்குக் கீழ்ப்படியும் பொழுது - நாம் விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறும் பொழுது. இயேசு நமது பாவக் கடனை செலுத்தினார், ஆனால் அவருடைய மரணத்தின் மூலமாக அவர் அளித்துள்ள இரட்சிப்பைப் பெறுவதற்கு நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபி. 5:9). ஆகையால் இரட்சிப்பில் உள்ள "என்ன?" என்பது இயேசுவின் இரத்தம் என்பதாகவும், "எப்பொழுது?" என்பது நாம் அவருக்குக் கீழ்ப்படிகின்றபொழுது என்பதாகவும் உள்ளன.*

*தக்க கண்ணோக்கில் காண்கையில், விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகிய எல்லாமே சுவிசேஷத்திற்கு நாம் அளிக்கும் பதில்செயலின் பாகமாகவே உள்ளன. இயேசு நமது பாவங்களைத் தாமே சுமந்தார், பாவக்கடனைச் செலுத்தினார் என்ற சத்தியமாக உள்ள சுவிசேஷமே அவரது இரத்தத்தின் மூலமாக நமது பாவங்களை மன்னிக்க முடியும், மற்றும் அவரே இந்த அண்டத்தை ஆளுபவராக நமக்காகப் பரிந்து பேசுபவராய் எந்நாளும் வாழ்கின்றார். நாம் நமக்கு மரித்தவர்களாய் நமது கர்த்தரும் ஆண்டவருமாகிய அவருக்கு நமது வாழ்வை ஒப்புக் கொடுத்தால் நமக்காக அவர் பெற்றுள்ள வெற்றியானது நமது வெற்றியாகும்.*

---

குறிப்பு

*[1]இரண்டாவது கருத்தைக் காட்டிலும் முதலாம் கருத்தின் மீது அதிக வலியுறுத்தம் தரப்படுவதில்லை என்ற அர்த்தம் தரும் இதே வகையான கிரேக்க வார்த்தைக் கட்டமைப்பானது யோவா. 6:27; 12:47; 1 தீமோ. 5:23; 1 பேது. 3:3, 4, மற்றும் பல வசனப் பகுதிகளில் காணப்படுகின்றன.*